**உடதும்பர பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

உடதும்பர பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடதும்பர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பனரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

-

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டடங்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 72 பேர்ச் பரப்புள்ள 05 காணிகள் மற்றும் பரப்பளவு மதிப்பிடப்படாத 03 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) ஹுன்னஸ்கிரிய பிண எரியூட்டல் நிலையத்தைச் சுற்றி வேலி அமைக்கும் திட்டத்தின் முதல் கட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 442,233 மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | 2021 ஆம் ஆண்டின் கணக்கின் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | எதிர்வரும் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.6.2 இணக்கமடையாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத்தொகை ரூபா. 7,342,774 ஆகவிருந்த 07 கணக்கு விடயங்களுடன் தொடர்பான மீதிகளுக்கும் பயன்பாட்டு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கும் இடையில் ரூபா. 1,681,880 வேறுபாடு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் கணக்கின் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் | எதிர்வரும் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.6.3. நிகழதக்க பொறுப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் கடைகள் தொடர்பில் வேறு தரப்பினர்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 05 வழக்குகள் மற்றும் வெளித் தரப்பினர் 06 பேரினால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த 06 வழக்குகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது உரிய தகவலகளை கணககாய்விற்க உட்படுத்த நடவடிக்கை எடுப்பேன் | தேவையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 132 ஆம் பிரிவு | சபையின் அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டைகளை அச்சிடுவதற்கு சட்டத்தின் பிரகாரம் சபை நிதியினை பயன்படுத்த முடியாதிருந்த போதும் அதற்காக ரூபா. 37,800 செலவிடப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2018 ஆகஸ்ட் 13 ஆந் திகதியிடப்பட்ட சீபீசீ/சீஎல்ஜீ/1/5/3-4 (2018) இலக்க கடிதத்தின் மூலம் கடிதத் தலைப்பு களை அச்சிடல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2012 ஜனவரி 05 ஆம் திகதிய 1/2012 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | 10 அபிவிருத்தி திட்டங்களை மேற் கொள்வதற்காக ரூபா. 13,085,198 இற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்த சங்கத்தின் மூலம் நிர்மாணங்கள் மேற் கொள்ளப்படாது வேறு தரப்பினர்களுக்கு உப ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. | இது தொடர்பாக குறித்த சங்கங்களிடம் வாய்மொழி மூலமாக வினவிய பொழுது பிரதேச சபையுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது வங்கிக் கூற்றுகளில் அத் தொகை காணப்பட்ட போதும் திட்டத்திற்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொழிலாளர்கள் கடன் அடிப்படையிலோ அல்லது பின்னர் பணம் செலுத்தும் அடிப்படையில் பெறப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,961,982 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,263,389 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் ரூபா. 205,784 ஆகக் காணப்பட்ட நிலுவை மீதியில் வருடத்தினுள் ரூபா. 56,510 அதாவது 27 வீதம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 388,414 ஆகிய நிலுவை மீதியினுள் 5 வருடங்கள் தாண்டிய ரூபா. 35,418உம் உள்ளடங்கியிருந்தது. | 2021 மே 20ஆம் திகதியன்று ரூபா. 67,476 ஆகிய தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் சுகாதார நிலைமைகள் சீரானதன் பின்னர் நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு குறித்த நிலுவைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **ஏக்கர் வரி** | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியன்று ரூபா. 121,281 ஆகக் காணப்பட்ட நிலுவை மீதியில் வருடத்தினுள் ரூபா. 6,997 ஆகிய 6 வீதம் மாத்திரம் | நிலுவைகளை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த தரப்பினருக்கு தொலைபேசி ஊடாகவும் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதியன்று காணப்பட்ட ரூபா. 122,852 ஆகிய நிலுவை மீதியினுள் 5 வருடங்கள் தாண்டிய ரூபா. 83,643உம் உள்ளடங்கியிருந்தது. | கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பெருந்தோட்ட அதிகார சபைக்குச் சொந்தமான 04 தோட்டங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 119,758 ஆகிய வரித் தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறு குறித்த தரப்பினருக்கு தொலைபேசி ஊடாகவும் கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **வேறு வருமானங்கள்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவையாகவிருந்த வாடகை வாகன மற்றும் முச்சக்கர வண்டிக் கட்டண மீதி ரூபா. 343,600 ஆகவிருந்ததுடன் வாடகை வாகன தரிப்பிட அனுமதிப்பத்திர வினியோகம் மூலம் பெறப்பட வேண்டிய நிலுவை ரூபா. 124,200 ஆகவிருந்தது. | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா. 841,930 ஆகிய நிலுவை நீர்க் கட்டண மீதியில் வருடத்தினுள் ரூபா. 496,687 ஆகிய 58 வீதம் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட ரூபா. 813,833 ஆகிய நிலுவைத் தொகையினுள் 1 தொடக்கம் 5 வருடங்களைக் கடந்த ரூபா. 186,906 உம் 5 வருடங்களைக் கடந்த ரூபா. 147,895 உம் உள்ளடங்கியிருந்தன. | 2021 மே 21ஆம் திகதி வரை ரூபா. 240,840 அறவிடப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**<br>2020 திசெம்பர் 31 இல் மாகாணசபை பிரதான செயளாலர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 698,495 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 5,985,184 ஆகிய தொகைகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய தொகையினை அறவீடு செய்வதற்கான அடுத்த நடவடிக்கைகளை எடுப்பேன். | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 20,726,751 ஆக இருந்ததுடன், இதில் 1 – 5 வருடங்களைக் கடந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா. 11,086,939 ஆகவும் 05 வருடங்களைக் கடந்த ரூபா. 1,764,033 நிலுவைத் தொகையையும் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத் தொகையினை அறவீடு செய்தல் தொடர்பாக குறித்த பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டினுள் வியாபாரக் கடன் கொடுத்தோருக்காக ரூபா. 8,361,588 உம் பல்வேறு கடன் கொடுத்தோருக்காக ரூபா. 671,952 உம் என மொத்தமாக ரூபா. 9,033,538 தொகை செலுத்தப்பட வேண்டியிருந்தது. | செலுத்த வேண்டிய கணக்குகளில் 2021 மே 21 ஆம் திகதியன்று மீதமுள்ள தொகை ரூபா. 9,033,538 ஆகவிருந்ததுடன் அத் தொகையைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. | தாமதமின்றி தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொம்போஸ்ட் ஆலை மற்றும் களஞ்சியசாலைக்காக 2010ஆம் ஆண்டு ரூபா. 3,487,828 தொகையும், 2019ஆம் ஆண்டு கொம்போஸ்ட் ஆலையின் கூரையை உயர்த்துவதற்காக ரூபா. 385,000 தொகையும், உரம் உலர்த்தல் நிலையத்திற்காக ரூபா. 1,167,606 தொகையும், இயந்திர உபகரணங்கள் கொள்வனவிற்காக 2012 – 2017 காலப்பகுதியினுள் ரூபா. 5,069,140 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டினுள் 5.5 தொன் கொம்போஸ்ட் உரம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டு ரூபா. 40,600 மாத்திரம் வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. | போதியளவு சுகாதார ஊழியர்கள் காணப்படாததன் காரணமாக திட்டத்தின் நடவடிக்கைகளை முறையாக செயற்படுத்துவதற்கு முடியாமலிருந்தது. | திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ள தொகையின் உச்ச பலனை பெற்றுக் கொள்ளும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை**<br>சபைக்குச் சொந்தமான 19 கடைகளின் மாதாந்த வாடகை 2018 மே 22 ஆம் திகதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும், அம் மதிப்பீடு செயற்படுத்தப்படாததன் காரணமாக அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா. 1,656,640 ஆகிய தொகையினை அறவிடுவதற்கு முடியாமல் போயிருந்தது. | 05 கடைகள் புதிய மதிப்பீட்டிற்கு அமைவாக பணம் செலுத்த விரும்பாததன் காரணமாக சபையின் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை அறவீடு செய்வதற்காக கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடைகளை முத்திரையிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தேசித்துள்ளேன். | புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவீடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள் பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் வருடம் முதல் சபையினால் கையேற்கப் பட்டுள்ள பயன்படுத்தும் நிலையில் உள்ள ரூபா. 17,649,179 பெறுமதியான பெகோலோடர் வாகனம் மற்றும் ரூபா. 7,967,144 பெறுமதியான சிங்கல் வைப்ரேடிங் லோடர் ஆகியன முன்னைய வருடத்திலிருந்து பயன்படுத்தப்படாமல் இருந்தது. | இயந்திர செயற்படுத்துனர் களுக்கான ஒரு சாரதி இல்லாமை காரணமாக வருமானம் உழைக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் வினைத்திறனான அடிப்படையில் பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மடுகல்ல தெற்கு குழாய்க்கிணறு திட்டத்தில் மண் அகழ்தல், குழாய் பதித்தல் மற்றும் மூடுதல் ஆகியன பிரதேச மக்களின் சிரமதானப் பங்களிப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், பட்டியலின் 19 ஆம் இலக்க செலவு விபரத்தின் மூலம் pvc குழாய் பொருத்தி மூடுவதற்காக ரூபா. 180,830 செலவிடப்பட்டிருந்தது. | குறித்த சங்கத்திடம் விசாரித்த பொழுது விலைப்பட்டியலை செலுத்தி முடித்த பின்னர் சேவை புரிந்த ஊழியர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டது. | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளை அளந்து, பரிசீலித்து பார்த்ததன் பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | தீகல்ல குள அபிவிருத்திக்கான மதிப்பீட்டில் 02 ஆம் இலக்க செலவு விபரத்தின் மூலம் 935.85 கன மீற்றர் அளவான மண்ணை அப்புறப்படுத்தல் எனக் குறிப்பிடப்பட்டு ரூபா. 304,435 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் பௌதிக பரிசோதனையின் போது குளத்தின் மதகின் அடியிலிருந்து கீழ்ப்பக்கமாக மண் அகற்றப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதற்கிணங் க மீண்டும் ஒரு முறை அளவைப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் அளவீடுகளைக் குறிப்பதில் பிழை ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட வேலைகளை அளந்து, பரிசீலித்து பார்த்ததன் பின்னர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் பரிந்துரையின் பேரில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் வேண்டும். |